**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - நெடுஞ்சாலைத்துறை - கருணை அடிப்படைப் பணி நியமனம் - காலஞ்சென்ற கிடங்கு காவலர் திரு.பி.சுப்பையா பாண்டியன் என்பவரின் மகன் திரு.எஸ்.ஆறுமுகம், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

**நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை**

**அரசாணை (2ப) எண்.50** **நாள்: 16.11.2023**

**சோபகிருது, ஐப்பசி- 30, திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை,நாள்.26.02.2021.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை-25 கடித எண்.60517/நிர்.7/2021, நாள் 02.11.2022 மற்றும் 02.09.2023.

--------

**ஆணை:-**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில். நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் பாளையங்கோட்டை (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்ட அலுவலகத்தில் கிடங்கு காவலராக பணிபுரிந்து வந்த போது திரு.பி.சுப்பையா பாண்டியன் அவர்கள் 19.10.2000 அன்று பணியிடையே இயற்கை எய்தினார் என தெரிவித்துள்ளார். அதனையடுத்து மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு.எஸ்.ஆறுமுகம் அவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரி அளித்த விண்ணப்பம் உரிய வழிமுறையில் பெறப்பட்டது என்றும் அதன்பேரில் தனியரது வயது, கல்வித்தகுதி மற்றும் தேவைப்படும் அனைத்து சான்றுகளும் அசலாக சரிபார்க்கப்பட்டது என்றும் அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 27 வருடம் 6 மாதம் ஆகும் என்றும் மற்றும் தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். மேலும் முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் 03.11,2020

நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியருக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது, என்றும் அதனைத் தொடர்ந்து தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் 11.11.2020 மு.ப அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.எஸ்.ஆறுமுகம் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 11.11.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு அரசின் ஆணையினைப் பெற்றுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநரின் செயற்குறிப்பை அரசு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத்துறையில் கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.எஸ்.ஆறுமுகம் என்பவரின் பணியினை 11.11.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25.
திரு.எஸ்.ஆறுமுகம், இளநிலை உதவியாளர் (நெ).
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25. வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-600 018.

**நகல்:-**
மாண்புமிகு அமைச்சர் - பொதுப்பணிகள் (கட்டிடங்கள்,
நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள்) அலுவலகம், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர்,
நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
(C.No.3513263/HM1/2022)

மே.கு.எண்: 46/2023/அ2 நாள்: 20.12.2023 //ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

/ அனுப்பப் படுகிறது/

பிரிவு அலுவலர்

பெறுநர்:
திரு. ஆறுமுகம்
இளநிலை உதவியாளர் (நெ)
செ.க.தொ.திட்டம்
திருநெல்வேலி உபகோட்டம்

Divisional Engineer (H)
Chennai - Kanyakumari
Industrial Corridor Project
Tirunelveli.
20/12/2023

மே.கு.எண்: 02/2023/அ, நாள்: 20.12.2023
"தனியருக்கு அனுப்பப்படுகிறது".

Assistant Divisional Engineer (H)
CKICP, Tirunelveli
20/12/23

உ.கோ.பொ (நெ) செ.க.தொ.திட்டம் திருநெல்வேலி மூலமாக